ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம :

நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர் 473) Aug (1) / 2026

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவர்கள்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

பார்த்தசாரதி ஸ்ரீதரன்

உதவி: க்ருஷ்ணா ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

உட்பொதிவு

1. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)..3

2. பெரியாழ்வார் திருமொழி (வ்யாக்யானம்)..27

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 438)

7-3-6. காலம் பெற என்னைக் காட்டுமின்கள் *
காதல் கடலின் மிகப் பெரிதால் *
நீல முகில் வண்ணத்து எம்பெருமான் *
நிற்கும் முன்னே வந்து என் கைக்கும் எய்தான் **
ஞாலத்து அவன் வந்து வீற்றிருந்த *
நான்மறையாளரும் வேள்வி ஓவா *
கோலச் செந்நெற்கள் கவரி வீசும் *
கூடு புனல் திருப்பேரெயிற்கே

பொருள் – காளமேகம் போன்று தாராள மனம் கொண்ட இயல்பை வெளிப்படுத்தும் வடிவழகைக் காண்பித்து என்னைத் தனக்கே என அடிமையாக்கிக் கொண்ட எனது ஸ்வாமியானவன், என் முன்பாக கலந்து நிற்பான். வந்து நிற்கும் அவன், தானே என் மீது விழுந்து என்னை அணைத்துக் கொள்ளுதல் என்பது போன்றவற்றைச் செய்யாமல் இருப்பதுடன் மட்டும் அல்லாமல் கைக்கு எட்டாதபடி உள்ள மேகம் போன்று தூரமாக நிற்பான். ஆக, காதலானது கடலைக் காட்டிலும் மிகவும் பெரியதாகவே உள்ளது. இவ்விதம் உள்ளதால், இந்தப் பூமியில் அவன் தனது வடிவழகுடன் வந்து, தனது தாராள குணமானது வெளிப்பட்டபடி வீற்றிருக்கும் இடமும்; அங்கு வாழ்கின்ற அனைத்து நான்கு வேத விற்பன்னர்கள், அவனுடைய ஆராதனை ரூபமாக எப்போதும் வைதீக முறைப்படி நடக்கும் இடமும்; காண்பதற்கு இனிமையான செந்நெற் கதிர்களானவை சாமரம் வீசுவது போன்று அசையும்படியாக அதற்கு ஏற்றவிதமாக நிறைந்துள்ள தண்ணீர் வளம் நிறைந்த இடமும் ஆகிய திருப்பேரெயில்

நகரத்திற்கு, காலதாமதம் பொறுக்க இயலாதபடி உள்ள என்னை, விரைந்து அழைத்துச் சென்று காண்பீப்பீர்களாக.

அவதாரிகை - நீங்கள் "கொடுபோவோமோ அல்லோமோ?" என்று விசாரிக்கும் தசையன்றிக்கே, எனக்கு அபிநிவேசமானது அறமிக்கது; எனக்கு இங்குத் தரிப்பு அரிது; ஈண்டென என்னைத் தென்திருப்பேரையிலே கொடுபுக்கு மகரநெடுங்குழைக்காதனைக் காட்டுங்கோளென்கிறாள்.

விளக்கம் – இவள், "நீங்கள் உங்கள் மனதில், 'இவளை அங்கு கொண்டு செல்லலாமா அல்லது வேண்டாமா', என்பது போன்ற ஆராய்ச்சிகள் செய்தபடி உள்ளீர்கள். ஆனால் எனது நிலையானது அது போன்று இல்லை. எனது காதலானது அறம் நிறைந்தது ஆகும். எனக்கு இங்கு உயிர் தரித்திருத்தல் என்பது கடினமே ஆகும். ஆகவே நீங்கள் என்னை இப்போதே தென்திருப்பேரெயில் நகரத்திற்கு கொண்டு சென்று, மகரநெடுங்குழைக்காதனைக் காண்பீப்பீர்களாக", என்கிறாள்.

வ்யாக்யானம் - (காலம் பெறவென்னைக் காட்டுமின்கள்) குடிக்குப் பரிஹாரமன்றாகிலும் எனக்குப் பரிஹாரம் இதல்லதில்லை. இனி என் மேல் குற்றமில்லை. என் ? இப்படிக் கடுக வேண்டுவானென்? என்னில், (காதல் கடலின் மிகப் பெரிதால்) இக்காதல் அளவுபட்டோ இருக்கிறது? முதற் சொன்ன வார்த்தையைக் காணுங்கோள். நீங்கள் நினைக்கிறத் "கடல் புரைய" என்றாளே. ஒரு காரியப்பாட்டாலே விளைந்தது போலன்றிறே உகப்பாலே விளைந்திருப்பது.

விளக்கம் – (காலம் பெறவென்னைக் காட்டுமின்கள்) - கடந்த பாசுரத்தில் "காலம் பெற" என்று கூறிய பின்னர் இங்கு மீண்டும் கூறுவதற்கான கருத்தை வ்யாக்யானத்தில் உள்ள "குடிக்கு" என்று தொடங்கும் இரண்டு வாக்கியங்களில் கூறுகிறார். இந்தக் குலத்திற்கு இத்தகைய செயலானது பரிஹாரம் இல்லை என்றாலும், எனக்கு இது அல்லாமல் வேறு பரிஹாரம் ஏதும் இல்லை. இனி என் மீது எந்தக் குற்றமும் இல்லை. ஏன் இவ்விதம் அவசரம் கொள்ளவேண்டும் என்பதற்கு விடை தருகிறாள்; (காதல் கடலின் மிகப் பெரிதால்) - இந்தக் காதலானது ஒரு அளவில் அடங்கி உள்ளதோ? முன்பு கூறப்பட்ட சொற்களாகிய திருவாய்மொழி (5-3-4) - காதல் கடல் புரைய விளைவித்த - என்ற சொற்களையே எண்ணியபடி நீங்கள் உள்ளீர்கள். ஆனால் ஒரு ஸாதனம் மூலம் ஏற்பட்ட பக்தி போன்று அல்லாமல் இவளுடைய பக்தியானது கரை புரண்டு இருப்பதற்குக் காரணம் என்ன என்பதைக் கூறுகிறார்; இந்தக் காதலானது, ஒரு குறிப்பிட்ட

பலனை எண்ணி விளைந்த ஸாதன பக்தி போன்று அல்லாமல், உகப்பு காரணமாக விளைந்ததால் ஆகும்.

வ்யாக்யானம் – "ஆனாலும் காதலையளவுபடுத்தி, நாங்கள் சொல்லுகிற வார்த்தையைக் கேட்டு எங்களோடே ஒழுக வேண்டாவோ?" என்ன, (நீலமுகில்வண்ணத் தெம்பெருமான்) நான் உங்கள் வழியே போகவோ? இவன் வழியே போகவோ? என்னை அப்படி சேர்த்து விட வந்து முன்னே நிற்க, நான் மீளும்படியென்? அப்படியாலே அவன் துவக்கா நிற்க, உங்கள் வார்த்தையைக் கேட்கவோ? ச்ரமஹரமான வடிவைக் கொண்டு முன்னே நின்று காதலுக்கு வர்த்தகனாகா நின்றான். இக்காதலை ஒருபடியே வளர்க்கிறதிறே. "கடல் புரைய விளைவித்த"தும் காரமர் மேனியிறே. (நிற்கும் முன்னே வந்து) இவன் கிட்ட நின்றிலனாகில் நான் உங்கள் வார்த்தை கேட்டு மீளேனோ? ஆனால் உனக்குப் பொல்லாதோ? என்ன, (என் கைக்கு மெய்தான்) அழகிதிறே, எனக்கு இப்படி தரப் பெறில். வார்த்தை சொல்லுதல், அணைத்தல் செய்யாமையேயன்று; என் கைக்கும் எட்டுகிறிலன். இனி நீ செய்யப் பார்த்ததென்? என்ன; உருவெளிப்பாடன்றியிலே கண்ணாலே கண்டநுபவிக்கலாந் தேசத்திலே போகப் பார்த்தேன்.

விளக்கம் – இதனைக் கேட்ட தாய்மார்கள், "ஆயினும் நீ உனது இந்தக் காதலை அளவுபடுத்திக் கொண்டு, நாங்கள் கூறுகிற சொற்களை கேட்டு, எங்களுடன் இருக்க வேண்டாமா?", என்றனர். இதற்கு விடை தருகிறாள்; (நீலமுகில் வண்ணத்து எம்பெருமான்) - நான் உங்கள் வழி போகவேண்டாமோ அல்லது இவன் வழி போகவேண்டுமோ? என்னை அவன் இவ்விதம் தனது திருமேனியுடன் சேர்த்து விடுவதற்காக என் முன்னே வந்து ஈடுபடுத்தியபடி நிற்கும்போது, நான் மீள்வது எப்படி? இவ்விதம் அவன் தனது திருமேனியுடன் நிற்கும்போது நான் உங்கள் சொற்களைக் கேட்பேனோ? காண்பவர்கள் களைப்பைப் போக்கும்படியான ஒரு வடிவத்தைக் கொண்டு என் முன்பாக வந்து நின்று, எனது இந்தக் காதலை அவன் வளர்த்தபடி உள்ளான். எனது காதலை ஒரேவிதமாக வளர்த்தபடி உள்ளான்; அதாவது தனது திருமேனியால் மட்டுமே வளர்த்தபடி உள்ளான். ஆனால் காதலை இவன் திருமேனி வளர்க்குமோ என்பதற்கு விடை, திருவாய்மொழி (5-3-4) - கடல் புரைய விளைவித்த - என்பதாக உள்ள இவன் திருமேனி அல்லவோ? (நிற்கும் முன்னே வந்து) - இவன் எனக்குக் கிட்டும்படியாக அருகில் வந்து நிற்கவில்லை என்றால், நான் உங்களுடைய சொற்க்ளை ஏற்று

மீண்டு வரமாட்டேனோ? இதனைக் கேட்ட தாய்மார்கள், "ஆனால் இது உனக்குத் தோஷம் ஆகாதோ?", என்பதற்கு விடை தருகிறாள். (என் கைக்கு மெய்தான்) - இவ்விதம் என் முன்பாக நான் அடையும்படியாக வந்து நிற்பது அழகு அல்லவோ? ஆயினும் என்னிடம், "சில சொற்கள் கூறுதல், அணைத்தல்" போன்றவற்றைச் செய்யாமல் இருப்பது மட்டுமே அல்ல; எனது கைக்கும் எட்டாமல் உள்ளான். இதனைக் கேட்ட தாய்மார்கள், "இனி நீ என்ன செய்யப் போகிறாய்?", என்றனர். இதற்கு இவள், "எப்போதும் என் மனக்கண்களால் மட்டுமே கண்டபடி உள்ள அவனை நேரடியாகக் கண்களால் எனக்கு அனுபவிக்கும்படியான திவ்யதேசத்திற்குச் செல்ல முயல்கிறேன்", என்றாள்.

வ்யாக்யானம் – (ஞாலத்தவன் வந்து வீற்றிருந்த) தூரப் போய்க் காணவேண்டாதபடி பரமபதத்தில் ஐச்வர்யமெல்லாம் இங்கே தோற்றும்படியிருந்த. (நான்மறையாளரும் வேள்வியோவா) வேதார்த்தவித்துக்களும் ஸமாராதநத்திலே நிரந்தரமாக ப்ரவ்ருத்தனார்கள். என்னோடு ஸஜாதீயரும், தந்தாமுக்கு வகுத்த கைங்கர்யம் பெற்று வர்த்தியாநிற்பர்கள். (கோலச்செந்நெல் இத்யாதி) வ்ருஷ்டியந்நாதி விஷயமாக அங்குள்ளார்க்கு யத்நிக்க வேண்டாதேயிருக்கை. அவை ஆநுஷங்கிக பலமாய் வருமத்தனை; "நீள்செல்வம் வேண்டாதான் தன்னையே தான் வேண்டும்" என்றும், "அங்கங்கேயவை போதரும்" என்றும் சொல்லக்கடவதிறே. தர்சநீயமான செந்நெற்களானவை அங்குத்தைக்குக் கவரி வீசினாற்போலே அசையாநிற்கும்.

விளக்கம் – (ஞாலத்தவன் வந்து வீற்றிருந்த) - மிகவும் தொலைவில் சென்று காணவேண்டியபடியான பரமபதத்தில் உள்ள ஐச்வர்யம் முழுவதும் இங்கேயே வெளிப்படும்படியாக. (நான்மறையாளரும் வேள்வியோவா) - வேதங்களின் ஆழ்பொருளை நன்கு கற்றறிந்தவர்கள், அந்த வேதங்கள் மூலமே அவனை ஆராதனை செய்தபடி, எப்போதும் இந்த விஷயத்திலேயே ஈடுபட்டபடி உள்ளனர். என்னைப் போன்று மற்ற எதனையும் கருதாமல் உள்ளவர்களும், தங்கள் தங்களுக்கு ஏற்பட்டுள்ள கைங்கர்யங்களைப் பெற்று வாழ்கிறார்கள். (கோலச்செந்நெல் இத்யாதி) - மழை மற்றும் உணவு ஆகியவற்றுக்காக அங்குள்ளவர்கள் பெரிய முயற்சி ஏதும் செய்யவேண்டாம் என்னும்படி நிலை உள்ளது; அவை தானாகவே வருபவையாக உள்ளன; இதற்கு ப்ரமாணம் பெருமாள்திருமொழி (5-9) - நீள்செல்வம் வேண்டாதான் தன்னையே தான் வேண்டும் - என்றும், பெரியாழ்வார் திருமொழி (5-1-4) - அங்கங்கேயவை

போதரும் - என்றும் உள்ளவை ஆகும். காண்பதற்கு இனிமையாக உள்ள செந்நெல் பயிர்களானவை அவனுக்குச் சாமரம் வீசுவது போன்று அசைந்தபடி உள்ளன.

வ்யாக்யானம் - (கூடு புனல் திருப்பேரெயிற்கே) ஆற்றுநீர், ஊற்றுநீர், வர்ஷஜலம் இவை மூன்றும் கூடியிருக்கையாலே ஜல ஸம்ருத்தியை யுடைத்தாயிருக்கை. (திருப்பேரெயிற்கே – காலம் பெறவென்னைக் காட்டுமின்கள்) என் விடாய் தீர ச்ரமஹரமான தேசத்திலே கொடுபோய்ப் பொகடப் பாருங்கோள். அங்குள்ள செந்நெலுக்கு நீர் தாரகமா யிருக்குமாப்போலே, இவளுக்கும் அவ்வூரில் காட்சியே தாரகமாயிருக்கிறபடி.

விளக்கம் – (கூடு புனல் திருப்பேரெயிற்கே) - ஆற்று நீர், ஊற்று நீர் மற்றும் மழை நீர் ஆகிய மூன்றும் எப்போதும் ஒன்றாகச் சேர்ந்தபடி உள்ளதால் நீர் ஸம்ருத்தியாக உள்ள நிலை. (திருப்பேரெயிற்கே – காலம் பெறவென்னைக் காட்டுமின்கள்) - எனது தாகம் தீரும்படியாக, களைப்பைப் போக்கும்விதமாக, அந்தத் திவ்யதேசத்தில் என்னைக் கொண்டு சேர்ப்பீராக. அங்குள்ள செந்நெல் பயிர்கள் பிழைப்பதற்கு நீரானது காரணமாக உள்ளது போன்று, இந்த ஊரின் காட்சியே இவள் பிழைக்கக் காரணமாக உள்ளது.

7-3-7. பேர் எயில் சூழ் கடல் தென் இலங்கை *
செற்ற பிரான் வந்து வீற்றிருந்த *
பேரெயிற்கே புக்கு என் நெஞ்சம் நாடிப் *
பேர்த்து வர எங்கும் காண மாட்டேன் **
ஆரை இனி இங்கு உடையம்? தோழீ! *
என் நெஞ்சம் கூவ வல்லாரும் இல்லை *
ஆரை இனிக் கொண்டு என் சாதிக்கின்றது? *
என் நெஞ்சம் கண்டதுவே கண்டேனே

பொருள் – பெரிய மதிள்களால் சூழப்பட்டு, அதற்கு அகழியாக உள்ள கடலைக் கொண்டதான தென்இலங்கையை அழித்து உபகாரம் செய்த அவன், தனது களைப்பு தீரும்படியாக வந்து, அந்த வெற்றியானது வெளிப்படும்படியாக வீற்றுள்ள தென்திருப்பேரெயில் நகரத்திற்குச் சென்று புகுந்த எனது நெஞ்சமானது அவனைத் தேடி மீண்டும் என்னிடம் திரும்புதல் என்பதை நான் எங்கும் காண இயலவில்லை. எனது துக்கத்தில் பங்கு கொள்ளும் என் தோழியே! இவ்விதம் உள்ளபோது எனது இந்த நிலையில் என்னை நியமிக்கவல்ல தாய்மார்களையும்,

என் மீது பழி கூறும் ஊரார்களையும் விடுத்து, நமக்குத் துணையாக நாம் வேறு யாரைக் கொண்டுள்ளோம்? அங்கு சென்ற எனது நெஞ்சத்தை மீண்டும் அழைத்து வந்து என்னிடம் தருவதற்கு வேறு யாரும் இல்லை. எனது நெஞ்சமும் எனக்கு உதவாமல், நீயும் தளர்ந்த பின்னர், நான் யார் மூலமாக என்ன பயனை எதிர்ப்பார்க்கமுடியும்? ஆகவே எனது நெஞ்சம் கண்ட அந்த விஷயத்தையே நானும் நாடிச் சென்று கண்டேன்.

அவதாரிகை – "அஹஞ்சாநுகமிஷ்யாமி லக்ஷ்மணேந கதாம் கதிம்" என்ற பெருமாளைப்போலே இப்பிராட்டியும் "என்னெஞ்சு தரிக்கைக்கு விரகு பார்த்துத் திருப்பேரெயிலிலே புக்காப்போலே நானும் அங்கே புகுமத்தனை" என்கிறாள். (பேரெயில் இத்யாதி) கீழில் அளவுகள் குலைந்த பின்பு இனி நான் செய்யப் பார்த்ததிது என்கிறாள்.

விளக்கம் - உத்தரகாண்டத்தில் – அஹம் ச அநுகமிஷ்யாமி லக்ஷ்மணேந கதாம் கதிம் - லக்ஷ்மணன் சென்ற வழியை நானும் பின்பற்றுகிறேன் - என்று கூறிய இராமனைப் போன்று, இந்தப் பராங்குசநாயகியும், "எனது நெஞ்சமானது தான் பிழைப்பதற்கு ஏற்ற வழியைப் பார்த்து, திருப்பேரெயிலில் புகுந்தது. அதனைப் போன்றே நானும் அங்கு செல்கிறேன்", என்கிறாள். எனது நிறம் தொடக்கமான அனைத்தையும் இழந்து, எனக்குப் பேச்சுத் துணையாக உள்ள நெஞ்சத்தையும் இழந்து, தாய்மார்கள் என்னைக் கொண்டு சென்று காண்பிப்பதற்கு ஒப்புக்கொள்ளாமல் இருப்பதுடன் மட்டும் அல்லாமல் விலக்கவும் செய்தபடி உள்ளபோது, இனி நான் செய்ய முயல்வது இதுவே ஆகும்", என்கிறாள்.

வ்யாக்யானம் – (பேரெயில்) பெரிய மதிள். (சூழ்கடல்) மதிளுக்கு அகழாம்படி அம்மதிளைச் சூழ்ந்த கடலையுடைத்தாய், கேட்கவஞ்சும்படியான ஊரை மூலையடியே நடக்கப் பண்ணின உபகாரகன். (வந்து வீற்றிருந்த) அப்போது முகம் மாற வைத்த இழவு தீர அணைக்கலாம்படி கிட்ட வந்திருக்கிற. "விமலசசாங்க நிபாநா" என்கிறபடியே - எப்போது பெருமாள் முகம் வைக்கவொண்ணாதபடி கொடியராயிருந்தார், அவ்வளவிலும் இவள் மறுவற்ற சந்த்ரமண்டலம்போலே முகத்தில் குளிர்த்தி மாறாதேயிருந்தாள். "தீபோநேத்ராதுரஸ்யேவ ப்ரதிகூலாஸி மே த்ருடம்"; இதுக்கு ஆளவந்தார் அருளிச் செய்யும்படி "நேத்ர தோஷத்தால் வந்தது போக்கி, தீப தோஷத்தால் வந்ததன்று" என்று.

விளக்கம் – (பேரெயில்) - பெரிய மதிள். (சூழ்கடல்) - அந்த மதிளுக்கு ஏற்ற அகழி என்று கூறலாம்படி அந்த மதிளைச் சூழ்ந்துள்ள கடலைக் கொண்டதாக உள்ளதும், அதன் பெயரைக் கேட்டாலே அனைவரும் அஞ்சும்படியாக உள்ளதும் ஆகிய இலங்கையை, முற்றிலுமாகத் தகர்த்த உபகாரன். (வந்து வீற்றிருந்த) - இராவணனை வதைத்த பின்னர், இந்த ஸீதைக்கு முகம் காண்பிக்காமல் இருந்த இழப்பானது தீரும்படியாக, இப்போதே சென்று அணைத்துக் கொள்ளலாம்படி அருகில் வந்துள்ள. இராவணனை வதைத்த பின்னர் ஸீதை இராமனிடம் அழைத்து வரப்பட்டபோது, அவன் தனது திருமுகத்தைக் காண்பிக்காமல் மாற வைத்தபோது இவள் எவ்விதம் இருந்தாள் என்றால் யுத்தகாண்டம் (114-36) – விமல சசாங்க நிபாநா - களங்கம் இல்லாத நிலவு போன்ற திருமுகம் கொண்டவளாக – என்பதாக இருந்தாள். அதாவது, அப்போதும் கூட இவள், களங்கம் அற்ற சந்த்ரன் போன்று முகத்தில் தனது குளிர்ச்சி மாறாமல் இருந்தாள்; ஆனால் அந்தச் சூழலிலும் இவள் இவ்விதம் இருக்கக் காரணங்கள் என்ன என்பதைக் கூறுகிறார்; நீண்டகாலம் பிரிந்த பின்னர் மீண்டும் இராமனைக் காணக் கிடைத்த மகிழ்வும், வேறு யாருடைய தீண்டுதல் என்ற தோஷம் இன்மையும், "எஜமானனுடைய செயல்களில் உள்ள காரணம் என்ன என்று ஆராய்ந்து என்ன ஆகப்போகிறது?" என்ற எண்ணமும் காரணங்கள் ஆகும். இராமன் தனது திருமுகத்தை மாற வைத்துக் கொண்டதற்கான ப்ரமாணம் யுத்தகாண்டம் (115-17) - தீபோ நேத்ராதுரஸ்ய இவ ப்ரதிகூலாஸி மே த்ருடம் - கண்களில் நோய் உள்ளவனுக்கு விளக்கு ஒளி போன்று எனக்கு நீ ப்ரதிகூலமாக உள்ளாய் என்பது நிச்சயம் - என்று இராமன் கூறியதாகும். இங்கு கூறிய உதரணம் மூலமாக, ஸீதையிடம் தோஷம் இல்லை என்பதை பரமாசாரியராகிய ஆளவந்தார் கூற்றிலிருந்து உரைக்கிறார்; அவர் கூறுவதாவது, "கண்களின் தோஷத்தால் வந்ததை விலக்கி, தீபத்தின் தோஷத்தால் வந்தது அல்ல" என்பதாகும்.

வ்யாக்யானம் - (செற்ற பிரான் வந்து வீற்றிருந்த) ப்ரதிகூல நிரஸநம் பண்ணி விடாய்த்து வந்திருக்கும்; "பர்த்தாரம் பரிஷஸ்வஜே" என்னும்படியே சிசிரோபசாரம் பண்ணப் போகவேணும். (பேரெயிற்கே இத்யாதி) அவனிருந்த திருப்பேரையிலே புக்குத் தேடி என்னெஞ்சானது ஓரிடத்திலும் மீண்டு வரக்காண்கிறிலேன். மீளவொண்ணாத லங்கையிலே புக்க திருவடியும் மீண்டு வந்தான்; அணித்தான இவ்வூரிலே புக்க நெஞ்சு மீண்டு வரக் காண்கிறிலேன். நெஞ்சுங்கூட வாராத பின்பு அவன் வாராமை சொல்ல வேண்டாவிறே, நெஞ்சின் வரவு பார்த்துக் கண்

மறைந்துகாணும் இவள் நிற்கிறது. (மாட்டேன்) கண்டு ஜீவியாதே நான் இங்ஙனே முடிந்து போமித்தனையாகாதே.

விளக்கம் – (செற்ற பிரான் வந்து வீற்றிருந்த) - "இலங்கையை வெற்றி கொண்ட பிரான் வந்து வீற்றுள்ள திருப்பேரெயில் நகரத்திற்குச் செல்லவேண்டும்" என்று துடித்தபடி உள்ளவளுடைய எண்ணத்தைக் கூறுகிறார். இவள் தனது மனதில், "விரோதிகளை அழித்த பின்னர் மிகவும் களைப்புடன் வந்திருப்பான். ஆகவே ஆரண்யகாண்டம் (30-40) - பர்த்தாரம் பரிஷஸ்வஜே - கணவனைத் தழுவிக் கொண்டாள் - என்பதற்கு ஏற்ப அவனுக்கு ஏற்ற பணிவிடைகள் பலவற்றையும் செய்வதற்கு அங்கு செல்லவேண்டும்", என்று எண்ணினாள். (பேரெயிற்கே இத்யாதி) - அவன் உள்ள திருப்பேரெயிலில் புகுந்து தேடியபடி இருந்த எனது நெஞ்சமானது அங்கிருந்து திரும்பி வருதலை நான் எந்த இடத்திலும் காணவில்லை. மீண்டு வருவதற்கு அரியதாக இருந்த இலங்கைக்குச் சென்ற அனுமன் கூட மீண்டு வந்தான்; ஆனால் மிகவும் அருகில் உள்ள இந்த ஊருக்குள் சென்ற எனது நெஞ்சமானது என்னிடம் மீண்டு வருதலைக் காண இயலவில்லை. அவனிடம் தூது சென்ற எனது நெஞ்சம் கூட என்னிடம் மீண்டு வராமல் உள்ளபோது, அவனுடைய வரவு குறித்துக் கூறவும் வேண்டுமோ? தனது நெஞ்சத்தின் வரவை எதிர்நோக்கித் தனது கண்கள் பூத்து நிற்கிறாள். (மாட்டேன்) – அல்லது, "கண்டு உயிர் பிழைக்காமல், நான் இவ்விதமே முடிந்து போவது ஏற்படுமோ?", என்று எண்ணுவதாகவும் கொள்ளலாம்.

வ்யாக்யானம் – அபிமதன் வருந்தனையும், அவனுக்காக வ்ருத்த கீர்த்தனம் பண்ணி தரித்திருக்க வேண்டாவோ? என்னில், (ஆரையினியிங்குடையந் தோழீ) நெஞ்சமில்லாதவன்று இனியாருண்டு? (தோழீ) "நெஞ்சிலண்ணியள் நானோ" என்றாயாகில், நீயானாயே. இப்போது நான் இங்கில்லையோ? (என்னெஞ்சங் கூவவல்லாருமில்லை) நெஞ்சை மீட்கைக்கு நீ வேணுமே, செஞ்சை யவனுக்காக்கின நீ வேணுமே எனக்கு ஆக்கும் போதும்; உன் தசையிது, உனக்குக் கால்கள் நடை தாராது; அல்லாதார்க்கு "கூட்ட வேணும்" என்னும் வரையில்லை; ஆர் நெஞ்சையழைப்பார்? (ஆரையினிக் கொண்டென் சாதிக்கின்றது) ஆரைக் கொண்டுதான் சாதிப்பது? இனி ஸாத்யந்தான் எது? நெஞ்சும் அவனும் வந்தால் இனி நான்தான் உண்டாக வேணுமே? இங்கு வெறுந்தறையாயிறே கிடக்கிறது. ஆனால் செய்யப் பார்த்ததென்? என்னில் (என்னெஞ்சங் கண்டதுவே கண்டேனே) மீளாத நெஞ்சு போன வழியே போகப் பார்த்தேன். "அத்யைவாஹம் கமிஷ்யாமி

லக்ஷ்மணேந கதாம்கதிம்” என்கிறபடியே நெஞ்சு போன வழியே போகப் பார்த்தேன்.

விளக்கம் – “ஆனால் தனது காதலன் வரும் காலம் முடிய, அவனுக்காக அவன் செய்த செயல்களைக் குறித்து எண்ணியபடியும் பாடியபடியும் இருந்து உயிர் தரிக்க வேண்டாமோ?”, என்பதற்கு விடை தருகிறாள். (ஆரையினியிங்குடையந் தோழீ) - எனது நெஞ்சமும் கூட என்னிடம் இல்லாதபோது எனக்கு வேறு யார் உள்ளனர்? (தோழீ) – இதற்குத் தோழியானவள், “உனது நெஞ்சத்தைக் காட்டிலும் உனக்கு அருகில் உள்ளவள் நான் அல்லவோ?”, என்றாள். இதற்கு நாயகி, “நீ தோழியாகவே இருந்தாய். அதாவது எனது துக்கத்தைக் கண்டு நீ எனக்கு முன்னரே தளர்ந்து கிடந்தாய்”, என்றாள். இதற்கு அந்தத் தோழி, “இப்போது நான் இங்கு இல்லையோ? உனது நெஞ்சத்தை நீ அழைத்துக் கொள்வதற்கு என்ன குறை?”, என்றாள். இதற்கு நாயகி, (என் நெஞ்சங் கூவவல்லாருமில்லை) - எனது நெஞ்சத்தை மீட்டு எடுப்பதற்கு நீ வேண்டுமே”, என்றாள்; இதற்குத் தோழி, “உனது நெஞ்சத்தை மீட்க நான் வேண்டுமோ?”, என்றாள்; இதற்கு, நாயகி, “எனது நெஞ்சத்தை அவனுக்கு என்று செய்தவள் நீ ஆவாய். ஆகவே அதனை மீண்டும் எனக்கு என்று செய்வதற்கு நீ வேண்டும் அல்லவோ?”, என்றாள். இதற்குத் தோழியானவள், “இந்த உதவியை நான் செய்யமாட்டேனோ?”, என்பதற்கு நாயகி, “உன் நிலை இதுவாகும்; அதாவது உனக்குக் கால்கள் நடை தராது” என்றாள். சரி, வேறு சிலரை அழைத்துச் செல்லலாம் அல்லவோ என்பதற்கு விடை தருகிறாள்; மற்றவர்களுக்கு என்னை அவனுடன் சேர்க்கவேண்டும் என்ற வேகம் இல்லை. இப்படி உள்ளபோது வேறு யார் நெஞ்சத்தை அழைப்பார்கள்? (ஆரையினிக் கொண்டென் சாதிக்கின்றது) – யாரைக் கொண்டு நான்ன் இனி இதனைச் சாதிக்க இயலும்? இனி சாதிக்க வேண்டியதுதான் என்ன உள்ளது? பாசுரத்தில் “ஆரை இனி இங்கு உடையம்” என்று கூறியதற்கும், வ்யாக்யானத்தில் “யாரை இனிக் கொண்டு” என்று கூறியதற்கும் என்ன வேறுபாடு என்பதைக் கூறுகிறாள்; நெஞ்சமும், அவனும் சேர்ந்து வந்தால், நான் இருக்கவேண்டும் அல்லவோ? முன்பு தோழியும் இல்லை என்றவள், இங்கு தானும் இல்லை என்கிறாள். இங்கு வெறும் தரையாக அல்லவோ உள்ளேன்? சரி, அப்படியானால் செய்ய முயல்வது என்ன என்பதைக் கூறுகிறாள்; (என்னெஞ்சங் கண்டதுவே கண்டேனே) - என்னிடம் திரும்பாமல் சென்ற நெஞ்சம் போன வழியே நான் செல்லப் பார்த்தேன்; அதாவது உத்தரகாண்டத்தில் – அஹம் ச அநுகமிஷ்யாமி லக்ஷ்மணேந கதாம் கதிம் -

லக்ஷ்மணன் சென்ற வழியை நானும் பின்பற்றுகிறேன் - என்று கூறிய இராமனைப் போன்று, நானும் செல்லப் பார்க்கிறேன்.

7-3-8. கண்டதுவே கொண்டு எல்லாரும் கூடி *
கார்க்கடல் வண்ணனோடு என் திறத்துக்
கொண்டு * அலர் தூற்றிற்று அது முதலாக் *
கொண்ட என் காதல் உரைக்கில் தோழீ! **
மண் திணி ஞாலமும் ஏழ் கடலும் *
நீள் விசும்பும் கழியப் பெரிதால் *
தெண் திரை சூழ்ந்து அவன் வீற்றிருந்த *
தென் திருப்பேரெயில் சேர்வன் சென்றே

பொருள் - எனது சரீரத்தில் காணப்பட்ட நிறம் இழத்தல் போன்ற பலவற்றையும் மட்டுமே பார்த்தவர்களாக, தாய்மார்கள் மற்றும் ஊரில் உள்ளவர்கள் என்பதான வேறுபாடு ஏதும் இல்லாமல், அனைவரும் சேர்ந்து நின்று ஒரே குரலாக, காண்பவர்கள் களைப்பைப் போக்கவல்ல கடல் போன்று கறுத்த வடிவம் கொண்டவனுடன் நான் சேர்ந்ததால் எனக்கு இப்படிப்பட்ட உருக்குலைதல் ஏற்பட்டது என்று பழி கூறித் தூற்றினர். எனது தோழியே! அத்தகைய பழிச்சொற்களையே காரணமாகக் கொண்டு, எனது காதலானது மேன்மேலும் பெருகியது. எனது இத்தகைய காதலைச் சொற்கள் கொண்டு கூறுகிறேன்; மண் நிறைந்த இந்தப் பூமியையும், இதனைச் சூழ்ந்துள்ள ஏழு ஸமுத்திரங்களும் என்பதாக உள்ள இவை அனைத்திற்கும் இடம் அளிக்கவல்லதாக உள்ள ஆகாசத்தையும் விட மிகப் பெரியதாக எனது காதல் வளர்ந்து நிற்கிறது. ஆகவே, தெளிந்த அலைகளுடன் கூடிய நீரானது சூழ்ந்து நிற்கும்படியாக, இவ்விதம் எனது காதலைப் பெரிதாக வளர்த்தவன் இருக்கும் தென்திருப்பேரெயிலில், எனது துக்கம் நீங்கும்படியாக நான் சென்று சேர்வேன்.

அவதாரிகை - எனக்கு “அவனைக் காணவேணும்” என்னும் அபிநிவேசம் கடலில் மிகப் பெரிது என்னுமளவன்றிக்கே, அறமிக்கது. ஆனபின்பு, நீங்களாக இசையிகோளாகில், தன் வேண்டப்பாடு தோற்ற எழுந்தருளியிருக்கிற தென்திருப்பேரெயிலை நான் போய்ப் புகுவேனென்கிறாள்.

விளக்கம் – எனக்கு, “அவனைக் காணவேண்டும்” என்பதாக உள்ள காதலானது, “கடலைக் காட்டிலும் மிகவும் பெரியது” என்பது மட்டுமே அல்லாமல், அளவிட

இயலாததும் ஆகும். ஆகவே நீங்களாகவே என்னை அங்கு கொண்டு சென்று சேர்க்கப் புறப்படவில்லை என்றால், தனது பெருமையும் மேன்மையும் வெளிப்படும்படியாக அவன் எழுந்தருளியுள்ள தென்திருப்பேரெயில் நகரத்திற்கு நானே சென்று புகுவேன் என்கிறாள்.

வ்யாக்யானம் - (கண்டதுவே கொண்டு) அவன் பேர் சொல்லுதல், "தலையில் வணங்கவுமாங்கொலோ?" என்று ஒரு ப்ரணாமஞ் செய்தல் செய்யுமிறே; அம்மாத்ரத்தையே கொண்டு, புறவிதழ் கண்டு படுகிறபடி இதுவானால், அகவாயிலோடுகிறது அறியில் என்படுவர்கள்? (எல்லாருங் கூடி) பரிவரோடு, ஹிதகாமரோடு, "இவையிரண்டுந்தான் என்?" என்று இருப்பாரோடு வாசியறக் கூடி. பிறரைப் பழி சொல்லவென்னில் தம்மில் தாம் சேராதவர்களும் சேர்வர்களிறே.

விளக்கம் - (கண்டதுவே கொண்டு) - இவளிடம் என்ன மாற்றங்களைத் தாய்மார்களும் ஊரார்களும் கண்டனர் என்பதைக் கூறுகிறாள். அவனுடைய திருநாமங்களைக் கூறுதல் மற்றும் தலையால் வணங்குதல் என்பதாக அவன் குணங்களில் ஈடுபடுதல் ஆகியவற்றை மட்டும் கண்டனர்; இதனை மட்டுமே கண்டு, அதாவது புறக்காட்சியில் தென்படுவது மட்டுமே கண்டு பழி கூறுகிறார்கள்; எனது நெஞ்சத்தில் உள்ளவற்றை அறிந்தால் என்ன செய்வார்களோ? (எல்லாருங் கூடி) – எனக்காகப் பரிந்தபடி உள்ளவர்கள், எனக்கு நன்மையை உண்மையில் விரும்புபவர்கள் மற்றும் "இந்த இரண்டும் என்றால் என்ன?" எனது கேட்பவர்கள் என்பதாகப் பலரும், எந்தவிதமான வேறுபாடும் இன்றி ஒன்றாகத் திரண்டு. ஆனால் தாய்மார்கள் மற்றும் தோழிமார்கள் அல்லாமல், இவள் விஷயத்திற்காக ஊரில் உள்ள மற்றவர்களும் ஒன்றாகக் கூடுவார்களோ என்பதற்கு விடை தருகிறாள்; மற்றவர்களைக் குறித்துப் பழி உரைக்கவேண்டும் என்றால், ஒருவருடன் ஒருவர் சேராதவர்களும் கூட ஒன்றாகச் சேர்வார்கள் அல்லவோ?

வ்யாக்யானம் - (கார்க்கடல்வண்ணனோடு என் திறத்துக் கொண்டு) இவள் நிறம் விவர்ணமாம்போது அவன் திறத்தே இழந்ததாக வேண்டாவோ? கடல் ஏறி வடிந்தவிடமென்று தோற்றுகிறதில்லையோ? என்னிடையாட்டத்தை ச்ரமஹரமான நிறத்தையுடையவனோடே கூட்டி. (அலர் தூற்றிற்றது முதலாகக் கொண்ட என் காதலுரைக்கில்) இவர்கள் பேசாதிருந்தார்களாகில் நானும்

ஸுகமேயிரேனோ? நான் பழிக்கு அஞ்சி மீளுவேனென்று காணும் இவர்கள் பழி சொல்லப்புக்கது. (அலர் தூற்றிற்று) அலர் தூற்றினார்கள்.

விளக்கம் - (கார்க்கடல்வண்ணனோடு என் திறத்துக் கொண்டு) - இவள் கார்கடல் வண்ணம் கொண்டவனிடம் மிகுந்த காதல் கொண்டவளானாள் என்பதை மற்றவர்கள் அறிந்தது எப்படி என்று கூறுகிறார்; இவளுடைய நிறமானது பசலை ஏறியபடி இருப்பதால், அவன் விஷயத்தில் இவள் தன்னை இழந்ததை அறியலாம் அல்லவோ? இதனை என்ன காரணத்தால் அறியலாம் என்றால், கடலானது கரையில் ஏறி வடிந்ததை அந்த மண்ணில் உள்ள நிற வேறுபாடு மூலம் அறியாமல் அல்லவோ? என்னுடைய செயல்பாடுகளை, காண்பவர் களைப்பைப் போக்கவல்ல அவனுடைய நிறத்துடன் சேர்க்கிறார்கள். (அலர் தூற்றிற்றது முதலாகக் கொண்ட என் காதலுரைக்கில்) - அவர்கள் இவ்விதம் ஏதும் பேசாமல் இருந்தால் நானும் ஸுகமாக இருக்கமாட்டேனோ? அவர்கள் இவ்விதம் பழி கூறுவதால், அவர்களுக்குக் கிட்டக்கூடிய பலன் என்ன என்பதைக் கூறுகிறாள். நான் இவர்களுடைய பழிக்கு அஞ்சியவளாக, அவன் விஷயத்திலிருந்து இவர்களிடம் மீண்டும் வந்து விடுவேன் என்று எண்ணி அல்லவோ இவர்கள் இவ்விதம் பழி கூறுகிறார்கள்? (அலர் தூற்றிற்று) - பழியைத் தூற்றினார்கள்.

வ்யாக்யானம் - (அது முதலித்யாதி) அதுதானேயடியாகக் கொண்ட என் காதலானது சதசாகமாகப் பணைக்கப் புக்கது. (காதலுரைக்கில்) தன் காதல் தன்னாலும் சொல்லி முடியவொண்ணாது காணும். "யதோ வாசோ நிவர்த்தந்தே" என்கிற விஷயத்தைச் சொல்லிலும் இவள் காதல் பேச்சுக்கு நிலமன்று. இக்காதலுக்கு விஷய பூதனானவனையும் விளாக்குலை கொள்ளவற்றான காதலிறே. "சுடர்ஞானவின்பம்" என்று பகவதானந்தத்தைக் சொல்லி வைத்து, "அதனிற் பெரியவென்னவா" என்றதிறே.

விளக்கம் – (அது முதலித்யாதி) - இத்தகைய பழிச்சொற்களையே காரணமாகக் கொண்டு, எனது காதலானது நூறு கிளைகள் கொண்டதாகப் பணைத்து நின்றது. (காதல் உரைக்கில்) - தனது காதலைத் தன்னாலும் கூற முடிக்க இயலாது என்பதை உணர்த்துகிறாள். அதாவது உபநிஷத்தில் – யதோ வாசோ நிவர்த்தந்தே - எந்த ஒரு ஆனந்தம் குறித்து உரைக்க இயலாமல் வாக்கு திரும்பியதோ - என்று கூறப்படும் அந்த விஷயத்தைக் குறித்தும் கூட கூறி முடிக்க இயன்றாலும், இவளுடைய காதலானது கூறி முடிக்க இயலாததாகும். இந்தக் காதலுக்கு யார் விஷயமாக உள்ளானோ, அவனையும் சேர்த்து உள்ளே இழுத்துக்

கொள்ளவல்லதாக உள்ள காதல். அவனையும் இழுக்க வல்லாதா என்றால், திருவாய்மொழி (10-10-10) – சுடர் ஞான இன்பம் - என்று பகவத் ஆனந்தத்தைக் கூறிய பின்னர், திருவாய்மொழி (10-10-10) – அதனில் பெரிய என் அவா - என்றார் அல்லவோ?

வ்யாக்யானம் - (தோழீ) இக்காதலை விளைக்கைக்கு நீ பண்ணும் க்ருஷியறிதியிறே; இது இருந்தபடி பாராய். (மண்திணி ஞாலமித்யாதி) "காதல் கடலில் மிகப் பெரிதால்" என்றவிடம் ஓராதே சொன்னோம். ஆனால் எங்ஙனே சொல்லும்படி என்னில்? பெரியவற்றில் பெரியதென்னுமித்தனையல்லது, ஒரு பாசுரமிட்டுச் சொல்லலாவதில்லை. மண்ணாலே நெருங்கின பூமியென்றபடி. அத்தையும் சூழ்ந்த கடலேழும், அவற்றுக்கெல்லாம் அவகாசமான ஆகாசமும், இவை இத்தனைக்கும் அவ்வருகு பட்டிருக்கை. இப்படி காதல் கரைபுரண்டால் செய்யப்பார்த்ததென்? என்ன;

விளக்கம் – (தோழீ) - எனது இந்தக் காதலை விளைப்பதற்கு நீ செய்த செயல்கள் அனைத்தும் நீ அறிவாய் அல்லவோ? இப்போது இது உள்ள நிலையைப் பார்ப்பாயாக. இதனைக் கேட்ட தோழியானவள், "முன்பு இந்தக் காதலானது கடலைக் காட்டிலும் பெரியதாக உள்ளது என்று கூறினாய். இவ்விதம் கூறிய நீ, இப்போது இப்படியாகக் கூறுவது ஏன்?", என்றாள். இதற்கு நாயகி விடை தருகிறாள்; (மண்திணி ஞாலமித்யாதி) – "இந்தக் காதலானது கடலைக் காட்டிலும் பெரியது" என்று முன்பு தயங்காமல் கூறினேன். ஆனால் அதனை நான் எப்படிக் கூறினேன் என்றால், "பெரியவற்றைக் காட்டிலும் பெரிதாக உள்ளது. ஆகவே இதனைச் சொற்கள் கொண்டு கூற இயலாது" என்பதால் ஆகும். மண்ணால் நெருங்கியபடி உள்ள பூமியும், அதனைச் சூழ்ந்துள்ள ஏழு கடலும், அவற்றை முழுவதாகத் தன்னுள் கொண்டுள்ள ஆகாசமும் ஆகிய இவை அனைத்திற்கும் அப்பால் உள்ளதாக இருந்தது. "சரி, இப்படிக் காதல் கரை புரண்டு நிற்கிறது. என்ன செய்யப் போகிறாய்?", என்பதற்கு விடை தருகிறாள்.

வ்யாக்யானம் - (தெண்திரை இத்யாதி) இக்காதல் மறுநனையும்படியான விஷயம் இருந்தவிடத்தே போய்ப் புகுமத்தனை. தெளிந்த திரைகளாலே சூழப்பட்டு அவன் வீற்றிருந்த தென்திருப்பேரையிலே போய்ப்புகுமத்தனை. "தஸ்யோபவநஷண்டேஷ நாநா புஷ்ப ஸுகந்திஷு | விஹ்ருத்யஸலிலக்லிந்நா தவாங்கே ஸமுபாவிசம்" என்கிறபடியே அநுபவயோக்யமான தேசத்திலே

போய்ப்புகக் கடவோம். (சேர்வன் சென்றே) இனிப் பகட்டால் தீராது, புக்கல்லது விடேன். ஆள்விடுதல், அவன் வரவு பார்த்திருத்தல் செய்யேன். (சென்றே சேர்வன்) இனி எதிரே அவன் வரிலும் மீளேன். அவனைச் சேருகையன்று உத்தேச்யம், அங்கே சென்று கிட்டுகை.

விளக்கம் – (தெண்திரை இத்யாதி) - இந்தக் காதலானது இவ்விதம் பெருகும்படியாக உள்ளதற்குக் காரணமாக உள்ள விஷயம் இருக்கும் இடத்திற்குச் செல்வேன். தெளிந்த அலைகள் சூழ்ந்தபடி உள்ள தென்திருப்பெரெயிலில் வீற்றிருக்கும் அந்த இடத்திற்குச் செல்வேன். ஸுந்தரகாண்டம் (38-14) - தஸ்யோபவநஷண்டேஷ நாநா புஷ்ப ஸுகந்திஷு | விஹ்ருத்யஸலிலக்லிந்நா தவாங்கே ஸமுபாவிசம் - பலவிதமான மலர்களுடைய சிறந்த நறுமணம் நிறைந்த அந்தச் சித்ரகூட மலையில் உள்ள பல நந்த்யாவனங்களில் விளையாடி, வியர்த்து, வாட்டம் அடைந்து, உமது மடியில் படுத்துக் கொள்வேன் – என்று கூறுவதற்கு ஏற்ப, அனுபவம் ஏற்படத் தகுதியாக உள்ள திவ்யதேசத்தில் சென்று புகுவேன். (சேர்வன் சென்றே) - இனி என்னுடைய பகட்டால் இந்த வேதனை தீராது. நான் அங்கு புகுதல் அல்லாமல் ஓயமாட்டேன். அவனிடம் தூது அனுப்புதல், அவன் வரும்வரை காத்திருத்தல் போன்றவற்றைச் செய்யமாட்டேன்; அதாவது பொத்திருக்கமாட்டேன். (சென்றே சேர்வன்) - இனி என் முன்பாக அவன் இங்கு வந்தாலும் நான் திரும்பமாட்டேன். அவனுடைய சேருதல் எனக்கு இலக்கு அல்ல, அங்கு சென்று அவனுடன் சேருதல் என்பதே இலக்காகும்.

7-3-9. சேர்வன் சென்று என்னுடைத் தோழிமீர்காள்! *
அன்னையர்காள்! என்னைத் தேற்ற வேண்டா *
நீர்கள் உரைக்கின்றது என் இதற்கு? *
நெஞ்சும் நிறைவும் எனக்கு இங்கு இல்லை **
கார்வண்ணன் கார்க்கடல் ஞாலம் உண்ட *
கண்ணபிரான் வந்து வீற்றிருந்த *
ஏர் வள ஒண் கழனிப் பழனத் *
தென் திருப்பேரெயில் மாநகரே

பொருள் – என்னைப் போன்று எனது நிலைமையைக் கண்டு, எனக்குச் சமமான துக்கம் அடைந்தபோதிலும் எனக்கு நன்மை கூறுவதாக எண்ணி விலக்கப் பார்க்கும் தோழிகளே! எனக்கு நன்மையை உபதேசிப்பதாக எண்ணும் தாய்மார்களே! நீங்கள் என்னைத் தேற்ற வேண்டிய அவசியம் இல்லை

(தேற்றுதல் என்றால், “இப்படிப்பட்ட ஒரு செயலில் ஈடுபடுதலானது பெண்மைத்தன்மைக்கு ஏற்றது அல்ல. இது நிறைவேறாமலும் போகும். ஆகவே இதனை விடுவாயாக” என்று கூறுதல் ஆகும்). எனது இந்த நிலையில், என்னைத் தேற்றும் விதமாக நீங்கள் என்ன சொற்களைக் கூறியபடி உள்ளீர்கள்! நான் தேறுவதற்கு அடிப்படைத் தேவையான எனது நெஞ்சமும் அடக்கமும் எனக்கு இல்லை. எனது நெஞ்சம் அங்கு சென்ற பின்னர், எனது தேறுதல் என்பதும் அங்கு சென்றது. ஆகவே எனது நெஞ்சத்தையும் அடக்கத்தையும் அபகரிப்பதன் அடிப்படையாக உள்ள கார்மேகம் போன்ற வடிவத்தையும், ப்ரளய ஆபத்தில் சூழ்ந்த கடல் நீரிலிருந்து இந்த ஜகத்தை உட்கொண்டு ஆபத்து காலத்தில் உதவிய தன்மையையும், அடியார்களுக்கு உபகாரம் செய்யும் பவ்யதையையும் கொண்ட க்ருஷ்ணனானவன் இங்கு வந்து வீற்றுள்ள இடமும், ஏர்முனைகள் நிறைந்து காண்பதற்கு இனிமையான கழனிகள் நிறைந்த இடமும், நீர் நிலைகள் பொருந்திய இடமும் ஆகிய தென்திருப்பேரெயில் என்ற மஹாநகரத்தை நான் சென்று அடைவேன்.

அவதாரிகை - நீங்கள் இனி என்னைத் தேற்றி ப்ரயோஜநமில்லை. தென்திருப்பேரெயிலைப் போய்ப்புகக்கடவேன் என்கிறாள்.

விளக்கம் – நாயகியானவள் தாய்மார்களிடமும் தோழிகளிடமும், “நீங்கள் இனி என்னைத் தேற்றியபடி உள்ளதால் எந்தப் பயனும் இல்லை. நான் தென்திருப்பெரெயில் நகரத்திற்குச் சென்று சேர்வேன்”, என்கிறாள்.

வ்யாக்யானம் - (சேர்வன் சென்று) உன்னாற்றாமையாலே சில சொல்லுகிறாயாகில் இது கடைப்படவற்றே? என்ன; “அவச்யம் அங்கே புக்கல்லது விடேன்” என்கிறாள். (என்னுடைத் தோழிமீர்காளித்யாதி) எனக்காயிருப்பாரும், என்னைத் தங்களுக்காக நினைத்திருப்பாரும் ஒன்றுஞ் சொல்லவேண்டா. தோழிமாரோடு தாய்மாரோடு வாசியில்லை காணும் இவளைத் தேற்றப் போகாமைக்கு. அஜ்ஞரோ வ்யவஸிதரை உபதேசத்தாலே மீட்கப் பார்ப்பார்? விஷயாதீனமாக வருகிறத்தை ஸாதகத்திலே செலவெழுதுகிறவர்களோ எனக்கு வார்த்தை சொல்லுவார்? இவள் தன்னை மறந்து, அவனையே பார்த்துப் பேசுகிறாள்; அவர்கள் அவனை மறந்து, தந்தாமையே பார்த்து மீட்கத் தேடுகிறார்கள்.

விளக்கம் – (சேர்வன் சென்று) - தாய்மார்கள் இவளிடம், “நீ உனது பிரிவற்றாமை காரணமாக இவ்விதம் பலவற்றையும் கூறினாய். ஆனால் இவை

நிறைவேறக்கூடியதோ?", என்றனர்; இதற்கு இவள், "நான் அவசியம் அங்கு சென்று சேர்வேன். அதுவரை ஓயமாட்டேன்", என்கிறாள். (என்னுடைத் தோழிமீர்காளித்யாதி) – "தோழிமீர்கள்" என்று மட்டுமே கூறாமல் "என்னுடைத் தோழிமீர்கள்" என்று ஏன் கூறவேண்டும் என்பதற்கு விடை தருகிறார்; எனக்காக உள்ளவர்களாக எண்ணுபவர்கள் ஏதும் சொல்லவேண்டாம்; "அன்னையர்காள்" என்று மரியாதையுடன் அழைப்பது ஏன்? என்னைத் தங்களுக்கு மட்டும் உரியவள் என்று எண்ணுவதால் இவ்விதம் கூறினாள்; அவர்களும் ஏதும் கூறவேண்டாம் என்கிறாள். தாய்மார்கள் நீங்கலாகத் தோழிமார்கள் கூட இவளைத் தேற்ற இயாலாதோ என்றால், இந்த விஷயத்தில் தோழிமார்கள் மற்றும் தாய்மார்கள் என்ற வேறுபாடு இல்லை என்று கருத்து. அறிவற்றவகள், முற்றும் உணர்ந்த ஞானிகளை, உபதேசம் கூறி மாற்ற இயல்வார்களோ? பகவத் விஷயம் காரணமாக வருவதை, ஸாதனங்கள் மூலம் வருவதாக எண்ணுபவர்களோ எனக்குத் தேற்ற சொற்க்ளைக் கூறவல்லவர்கள் ஆகிறார்கள்? இவள் தன்னை மறந்து, தங்களை மட்டுமே எண்ணியவர்களாக, இவளை மீட்க வழி பார்க்கிறார்கள்.

வ்யாக்யானம் - (நீர்களுரைக்கின்றதென் இதற்கு) கலங்கினாரோ தெளிந்தாரைத் தேற்றுவார்? நீங்கள் நிற்கிற நிலையெது? என் நிலையெது? போகையிலே துணிந்திருக்கிற என்னை, "புறப்படுகை பழி" என்றிருக்கிற நீங்கள் சொல்லுவதென்? (இதற்கு) எனக்கோடுகிற தசைக்கு. ஆனாலும் நெஞ்சும் அடக்கமுமுடையார்க்கு இது வார்த்தையோ? நாங்கள் சொன்னபடி செய்து எங்கள் வழியே ஒழுகவேண்டாவோ? என்ன; (நெஞ்சும் நிறைவுமெனக்கிங்கில்லை) அது வேணுமாகில் அங்கே போய்ச் சொல்லுங்கோள். மநஸ்ஸூம் அடக்கமும் அவன் பக்கலின. நிறைவாவது அடக்கம். நெஞ்சாவது அது இட்டு வைக்கும் கலம்.

விளக்கம் – (நீர்களுரைக்கின்றதென் இதற்கு) கலங்கியபடி உள்ளவர்களோ தெளிவாக உள்ளவர்களைத் தேற்றமுடியும்? நீங்கள் நிற்கும் நிலை என்ன? எனது நிலை என்ன? அங்கு செல்வதற்குத் தயாராக நிற்கும் என்னை நோக்கி, "நீ புறப்பட்டால் பழி ஏற்படும்", என்று கூறும் நீங்கள், என்ன சொல்ல முயல்கிறீர்கள், (இதற்கு) - எனக்கு எப்போதும் ஏற்பட்டுள்ள இந்த நிலைக்கு. இதனைக் கேட்ட தாய்மார்கள், "ஆனால், நல்ல நெஞ்சமும், தக்க அடக்கமும் கொண்டுள்ளவர்களுக்கு ஏற்ற சொற்களா இவை? நாங்கள் கூறியவற்றைக் கேட்டு எங்கள் வழியே பின்பற்ற வேண்டாமோ?", என்றார்கள். இதற்கு இவள் விடை

தருகிறாள். (நெஞ்சும் நிறைவுமெனக்கிங்கில்லை) - அப்படிப்பட்ட எனது தன்மையும் நிலையும் எனக்கு ஏற்படவேண்டும் என்று நீங்கள் எண்ணினால், அங்கு சென்று கூறுங்கள். எனது மனமும் அடக்கமும் அவனிடம் உள்ளன. நிறைவு என்பது அடக்கம்; நெஞ்சம் என்பது அதனை இட்டு வைக்கின்ற பாத்திரம்.

வ்யாக்யானம் - (கார்வண்ணனித்யாதி) நெஞ்சும் நிறைவும் எனக்காம்படியாயோ அவன்படி இருக்கிறது? (கார்வண்ணன்) தாய்மார் தோழிமாரானவர்கள் வார்த்தை கேளாதபடியாக வடிவு படைத்தவன். வெறும் வடிவழகேயோ உள்ளது? என்னில், (கார்க்கடல் ஞாலமுண்ட) தளர்ந்தார் தாவளம். ஆபத்து வந்தால் ரக்ஷித்து விடுமத்தனையோ? என்னில் (கண்ணபிரான்) தன்னைப் பிறர்க்காக்கி வைக்கும் உபகாரகன். (வந்து வீற்றிருந்த) தன் ஐச்வர்யமெல்லாம் தோற்றும்படியிருந்த. (ஏரித்யாதி) ஏரினுடைய ஸம்ருத்தியையுடைத்தாய், அழகிதான கழனியையும் நீர்நிலங்களையுமுடைய திருப்பேரெயிலாகிற மாநகரிலே சென்று சேர்வன். உங்கள் தடைக்கு மீளுதல், அவ்வழியில் நிற்றல் செய்யேன். என்னைத் தேற்றவேண்டா. வளமென்று மிகுதிக்குப் பேர்.

விளக்கம் – (கார்வண்ணனித்யாதி) - என்னுடைய நெஞ்சமும் அடக்கமும் எனக்கு ஏற்றபடியாகவோ அவனிடம் உள்ளது? (கார்வண்ணன்) - தாய்மார்கள் மற்றும் தோழிமார்களுடைய சொற்களைக் கேட்காதபடியாகச் செய்யவல்ல அழகான வடிவு கொண்டவன். அவனிடம் வெறும் வடிவழகு மட்டும்தானோ உள்ளது என்றால், விடை தருகிறாள்; (கார்வண்ணன்) - அப்படி அல்ல, தளர்ந்தவர்களுக்கு ஆதாரமாக உள்ளவன். சரி, ஆபத்து வந்தால் காப்பாற்றும் அந்தத் தன்மை மட்டும்தானோ உள்ளது என்பதற்கு விடை தருகிறாள்; (கண்ணபிரான்) - தன்னையே மற்றவர்களுக்கு என்று செய்து வைத்த உபகாரகன். (வந்து வீற்றிருந்த) - தனது அனைத்து ஐச்வர்யங்களும் முற்றிலுமாக வெளிப்படும்படியாக உள்ள. (ஏரி இத்யாதி) - ஏர்களுடைய நிறைவைக் கொண்ட அழகு நிறைந்த கழனிகளையும், நீர் நிலங்களையும் கொண்டதாக உள்ள தென்திருப்பெரெயில் என்ற மாநகரத்திற்கு நான் சென்று சேர்வேன். உங்களுடைய தடையைக் கேட்டு மீறுதல், நீங்கள் மீட்க முயலும் வழியில் நிற்றல் போன்றவற்றைச் செய்யமாட்டேன், என்னைத் தேற்ற முயலவேண்டாம். வளம் என்றால் மிகுதி என்று பொருள்.

7-3-10. நகரமும் நாடும் பிறவும் தேர்வேன் *
நாண் எனக்கு இல்லை என் தோழிமீர்காள்! *
சிகர மணி நெடு மாட நீடு *
தென் திருப்பேரெயில் வீற்றிருந்த **
மகர நெடுங்குழைக் காதன் மாயன் *
நூற்றுவரை அன்று மங்க நூற்ற *
நிகர் இல் முகில் வண்ணன் நேமியான் *
என் நெஞ்சம் கவர்ந்து எனை ஊழியானே?

பொருள் – எனக்குத் தோழிமார்கள் என்று பெயரளவில் மட்டுமே கூறிக்கொண்டு, எனக்கு நன்மை கூறுவதாக எண்ணியபடி என்னை நியமிக்க முனைபவர்களே! சிகரம் போன்று மணிகளால் பதிக்கப்பட்ட ஓங்கிய மாடங்கள் கொண்டதும், அவன் நீண்ட காலம் வசித்தபடி உள்ளதும் ஆகிய தென்திருப்பேரெயில் நகரத்தில் எழுந்தருளியுள்ளவனும், மகரம் போன்ற வடிவுள்ள பெரிய குழை என்ற ஆபரணத்தைக் கொண்ட செவிகள் உடையவனும், அந்த ஆபரணத்தின் அழகு போன்றே வியக்க வைக்கும் குணங்களையும் லீலைகலையும் கொண்டவனும், தனது அடியார்களாகிய பாண்டவர்களின் விரோதிகளாகிய துரியோதனன் உள்ளிட்ட நூறு கௌரவர்களை அன்று மஹாபாரதப் போரில் மடியும்படியாகச் செய்தவனும், அதன் காரணமாக ஒப்பற்ற காளமேகம் போன்ற வடிவத்தில் மகிழ்ச்சியும் மேன்மையும் கொண்டவனும், அடியார்களைக் காப்பதற்காக சக்கரத்தாழ்வானைக் கொண்டவனும் ஆகிய அவன், இத்தகைய ஈடில்லாத பல செயல்களையும் காண்பித்து எனது நெஞ்சத்தை எத்தனை காலமாக அபகரித்தபடி உள்ளான்! அவன் வீற்றுள்ள நகரம், நாடு, அங்குள்ளவர்கள் என்ற வேறுபாடு காணாமல் நான் நேரடியாக அங்கு சென்று ஆராய்வேன்.

அவதாரிகை – “இருந்ததே குடியாக நாட்டார் உன்னைப் பழி சொல்லார்களோ?” என்று தோழிமார்கள் சொல்ல, “அவர்களன்றே எனக்குத் தேட்டம்?” என்கிறாள்.

விளக்கம் – இவளிடம் தோழிமார்கள், "நாட்டில் உள்ள அனைவரும் உன்னைப் பழி பேச மாட்டார்களோ?", என்றார்கள். இதற்கு இவள், "அவர்களை அல்லவோ நான் தேடியபடி உள்ளேன்!", என்கிறாள்.

வ்யாக்யானம் - (நகரமும் நாடும் இத்யாதி) உன் துணிவு துணிவாக, நாட்டார் நகரத்தார் மற்றுமுள்ளாரும் எல்லாம் அறிந்து பழி சொல்லுகிறார்களிறே என்ன; எனக்குத்தான் அவனையோ தேட்டம்? நகரம், நாடு, பத்தநாதிகள் இவற்றிலுள்ளாருடைய பழியேயன்றே எனக்குத் தேட்டம்? (தேர்வேன்) தேடுகிறேனென்றபடி. நீங்கள் சேரிகோளாகில், அவன் தானாக வாரானாகில், அவனுடனே கூட்டிப் பழி சொல்லுகிற இவர்களன்றே ஸத்தையை நோக்குகிறார்கள்; "அலரெழவாருயிர் நிற்கும்" என்றானிறே. பிறவும் - மற்றுமுள்ளனவும்.

விளக்கம் - (நகரமும் நாடும் இத்யாதி) - "உன்னுடைய துணிவு காரணமாக உனது செயல்கள் அனைத்தும் மற்றவர்களால் அறியப்பட்டு, அதன் விளைவாக நாட்டில் உள்ளவர்கள், நகரத்தில் உள்ளவர்கள், மற்ற இடங்களில் உள்ளவர்கள் என்று அனைவரும் பழி கூறுகிறார்கள்", என்று தோழிமார்கள் கூறினார். இதற்கு இவள் விடை தருகிறாள். என்னுடைய தேடுதல் என்பது அவனோ? அல்லவே! நகரம், நாடு, மற்ற இடங்கள் என இவற்றில் உள்ளவர்களுடைய பழிச்சொற்களை அல்லவோ நான் தேடுகிறேன்? (தேர்வேன்) - தேடுகிறேன். நீங்கள் என்னை அவனுடன் சேர்க்காதவர்கள் என்றுள்ளபோது, அவனும் வராமல் உள்ளபோது, அவனுடன் என்னைச் சேர்த்து வைத்து, பழி கூறும் இவர்கள் அல்லவோ என்னுடைய இருப்பிற்குக் காரணமாக உள்ளனர்! இப்படிப்பட்ட பழிச்சொல்லானது இருப்பை உறுதியாக்கும் என்பதற்கு ப்ரமாணம் திருக்குறள் (1141) - அலரெழவாருயிர் நிற்கும் - என்பதாகும்.

வ்யாக்யானம் - (நாண் எனக்கில்லை) லஜ்ஜை இங்கில்லாமையேயன்று; அங்குப் போனாலுமில்லை. இவ்வ்யக்திதன்னில் முதலிலேயில்லாமை. (என் தோழிமீர்காள்) இது நான் உங்களுக்குச் சொல்லியறிய வேண்டும்படியாவதே! (சிகரம் இத்யாதி) பர்வத சிகரங்களைக் கொடுவந்து வைத்தாற்போல ஓக்கமுடைத்தாய், ரத்நமயமான மாடங்களையுடைய பெரிதான தென்திருப்பேரையிலே வீற்றிருந்த. (மகரநெடுங்குழைக்காதன்) மகராகாரமான பெரியவாபரணத்தையுடைய கர்ணபாசங்களை யுடையவன். அவனுடைய ஓரோவவயவங்களிலே படிந்தாரை மீட்கலாயோ விருப்பது? (மாயன்) சொல்லிச் சொல்லாத தேஹகாந்தியையும் ஆத்மகுணங்களையும் நினைக்கிறது. (மாயன்) ஆச்ரித பக்ஷபாதம்.

விளக்கம் - (நாண் எனக்கில்லை) - "இங்கு இல்லை" என்று கூறாமல், "எனக்கு இல்லை" என்று கூறியதன் கருத்தை அருளிச்செய்கிறார்; நாணமானது இங்கு உள்ளபோது மட்டுமே இல்லை என்பது இல்லை; அங்கு சென்றாலும் இல்லை; அதாவது எனது இந்தச் சரீரத்தில் தொடக்கம் முதலாகவே இல்லை; (என் தோழிமீர்காள்) - எனது சிந்த நிலையை உங்களுக்கு நான் கூறிய பின்னர் மட்டுமே உங்களுக்கு அறியும்படி ஆனதே! (சிகரம் இத்யாதி) - மலைகளுடைய நீண்ட சிகரங்களைக் கொண்டு வந்து வைத்தது போன்று உயரத்தைக் கொண்டதாகவும், இரத்தினமயமாக உள்ளதாகவும் காணப்படும் மாடங்கள் கொண்ட பெரிய தென்திருப்பேரெயிலில் வீற்றிருந்த. (மகரநெடுங்குழைக்காதன்) -மகரத்தின் வடிவம் கொண்ட பெரிய தோடு ஆபரணத்தைக் கொண்ட செவிகள் உடையவன். இப்படியாக அவனுடைய ஒவ்வொரு அவயவங்களிலும் தனித்தனியாகப் படிந்தபடி உள்ளவர்களையோ மீட்க இயலும்? (மாயன்) - ஆச்சர்யத்தை உடையவன். இன்ன காரணம் என்று சிறப்பித்து கூறாமல் "மாயன்" என்று பொதுவாக உரைத்ததன் காரணத்தைக் கூறுகிறார்; உரைத்தும் உரைக்கப்படாத திருமேனியின் காந்தியையும், ஆத்மகுணங்களையும் எண்ணுகிறாள். (மாயன்) - அடியார்களிடம் மட்டுமே பக்ஷபாதம் காணாதபடி உள்ளவன்.

வ்யாக்யானம் - (நூற்றுவரை அன்று மங்க நூற்ற) சிலரையழிக்க நினைத்தால் ஒன்றும் சேஷியாதபடி யழிக்குமவன். துர்யோதநாதிகளை பாரத ஸமரம் ப்ரவ்ருத்தமானவன்று நசிக்கும்படி மந்த்ரித்த. (நிகரில் முகில்வண்ணன்) ஒப்பில்லாத காளமேகம் போலேயிருக்கிற வடிவழகு. இத்தால் விரோதியை வளர்த்தாலும் விடவொண்ணாத வடிவழகு என்கை. (நேமியான்) ஆச்ரித விரோதிகளைப் போக்கும்போது பகலை இரவாக்கும் பரிகரத்தையுடையவன். திருவாழியைக் கொண்டு பீஷ்மாதிகளையும் தொடராநிற்குமிறே.

விளக்கம் - (நூற்றுவரை அன்று மங்க நூற்ற) - ஒரு சிலரை அழிக்கவேண்டும் என்று தீர்மானித்தால், யாரும் மீதம் இல்லாதபடி முற்றிலுமாக அழிப்பவன். துரியோதநன் போன்றவர்களை மஹாபாரத யுத்தம் நிகழ்ந்த நேரத்தில் அழியும்படியாகச் செய்த. (நிகரில் முகில்வண்ணன்) - ஒப்பற்ற காளமேகம் போன்ற வடிவழகு கொண்டவன். இதன் மூலம் இவன் விஷயத்தில் விரோதத்தை வளர்த்துக் கொண்டாலும், விட இயலாத வடிவழகு என்பது கூறப்பட்டது. (நேமியான்) - அடியார்களாக இருந்தாலும், அடியார்களுடைய விரோதிகளாக இருந்தாலும், இந்தச் சக்கரத்தைக் கொண்டே வெல்கிறான் என்பதைக் கூறுகிறார்; அடியார்களுடைய விரோதியைப் போக்கும்போது, இந்தச் சக்கரத்தாழ்வான் மூலம்

சூரியனை மறைத்து, பகலை இரவாக்கும்படிச் செய்பவன். இந்தச் சக்கரத்தாழ்வானைக் கொண்டு பீஷ்மர் போன்றவர்களையும் தொடர்ந்தபடி இருப்பவன்.

வ்யாக்யானம் - (நிகரில் முகில்வண்ணன் நேமியான்) துர்யோதநாதிகளுக்கு மின்னும் இடியுமாய், பாண்டவர்கள் ஆர்த்தி தீர வர்ஷித்து நின்றபடி. அவன் உன் விரோதிகளைப் போக்கிக் கூட நினையாத பின்பு, அவன் தானே வந்து உன் காலிலே விழும்படி மந்த்ரித்தாலோ? என்ன, (என்னெஞ்சங் கவர்ந்தெனை யூழியானே) அதுக்கீடான பரிகரமிழந்து நான் எத்தனை காலமுண்டு? வடிவழகையும் ஆயுதச்சேர்த்தியையுங் காட்டி என் நெஞ்சை யபஹரித்துப்போய் எத்தனை காலத்தான்? (எனையூழியானே) அநேக கல்பமுண்டு. துர்யோதநாதிகளை வெல்ல எண்ணினாப்போலே என்னெஞ்சை யபஹரிக்கைக்கு எத்தனை காலமெண்ணினானோ?

விளக்கம் – (நிகரில் முகில்வண்ணன் நேமியான்) - துரியோதனன் போன்றவர்களுக்கு மின்னலும் இடியுமாக, பாண்டவர்கள் துன்பம் நீங்கும்படி அவர்களுக்கு மழை போன்று உள்ளவன். இதனைக் கேட்ட தோழிமார்கள், "அவன் உனது விரோதிகளைப் போக்கவும் கூட நினைக்காதபடி உள்ளபோது, அவன் தானாகவே உனது காலில் விழும்படியாக நீ செய்தால் என்ன?", என்றனர். இதற்கு இவள் விடை தருகிறாள்; (என்னெஞ்சங் கவர்ந்தெனை யூழியானே) - அதற்கு ஈடான சக்திகளை நான் இழந்து எத்தனை காலம் ஆயிற்று! தனது வடிவழகையும், ஆயுதங்களுடைய சேர்த்தி அழகையும் எனக்குக் காண்பித்து, எனது நெஞ்சத்தை அபகரித்துச் சென்று எத்தனை காலம் ஆயிற்று! (எனையூழியானே) - பல கல்பங்கள் ஆயிற்று. துரியோதனன் போன்றவர்களை வெல்வதற்கு எத்தனை காலம் ஆலோசித்தானோ என்பது போன்று, எனது நெஞ்சத்தை இவ்விதம் அபகரிக்க எத்தனை காலமாக எண்ணியபடி இருந்தானோ?

7-3-11. ஊழி தோறு ஊழி உருவும் பேரும் *
செய்கையும் வேறவன் வையம் காக்கும் *
ஆழி நீர் வண்ணனை அச்சுதனை *
அணி குருகூர்ச் சடகோபன் சொன்ன **
கேழில் அந்தாதி ஓர்ஆயிரத்துள் *
இவை திருப்பேரெயில் மேய பத்தும் *
ஆழி அங்கையனை ஏத்த வல்லார் *
அவர் அடிமைத் திறத்து ஆழியாரே

பொருள் – ஒவ்வொரு கல்பங்களிலும் வெவ்வேறு திருநாமங்களையும் செயல்களையும் கொண்டவனாக இந்த ஜகத்தைக் காப்பாற்றியபடி உள்ளவனும்; ஸமுத்ர நீர் போன்று பசுமையாக உள்ளதும், அவனுக்கே உரியதும் ஆகிய திருமேனியைக் கொண்டவனும்; தன்னால் காக்கப்பட வேண்டியவர்களை எப்போதும் நழுவ விடாமல் உள்ளவனும் ஆகிய அச்சுதனைக் குறித்து, இந்த ஜகத்துக்கே ஆபரணம் போன்றுள்ள ஆழ்வார்திருநகரியின் நிர்வாஹகராகிய நம்மாழ்வார் அருளிச்செய்த ஆயிரம் அந்தாதிகளில், திருப்பேரெயில் குறித்த இந்தப் பத்துப் பாசுரங்கள் மூலம், திருக்கரமும் திருவாழியும் என்பதாக உள்ள ஸர்வேச்வரனைப் புகழ்ந்து துதிக்க வல்லவர்கள், அவனிடமும் அவனுடைய அடியார்களிடமும், சக்கரத்தாழ்வான் போன்ற கைங்கர்யத்தன்மை கொண்டவராக இருப்பார்கள்.

அவதாரிகை - நிகமத்தில் இத்திருவாய்மொழி கற்றார் பகவத் கைங்கர்யத்திலே மிகவும் அவகா ஹித்தாரென்கிறார்.

விளக்கம் – "இந்தத் திருவாய்மொழியைக் கற்றவர்கள், பகவத் கைங்கர்யத்தில் ஆழமாக மூழ்கியவர்கள் ஆவர்", என்கிறார்.

வ்யாக்யானம் - (ஊழியித்யாதி) ஆச்ரித ரக்ஷணார்த்தமாக கல்பந்தோறும் திருமேனியும் திருநாமமும் சேஷ்டிதங்களும் வேறுபடக் கொள்ளுமவன். இதுக்கு ப்ரயோஜநமென்? என்னில், (வையங்காக்கும்) ஜகத் ரக்ஷணார்த்தமாக (ஊழிதோறூழியித்யாதி) அப்படியே ரக்ஷித்திலனாகில் இப்படி விச்வஸிப்பாரில்லையே இவனை "ரக்ஷகன்" என்று. (ஆழி நீர்வண்ணனை)

நோக்காதே படுகொலையடிக்கிலும் விடவொண்ணாத வடிவு. வேறுபடாதே அங்குள்ளார்க்குக் காட்சி கொடுக்கும் அஸாதாரண விக்ரஹத்தைச் சொல்லுகிறது.

விளக்கம் – (ஊழியித்யாதி) - தனது அடியார்களைக் காப்பாற்றுவதற்காக ஒவ்வொரு கல்பத்திலும் பல திருமேனிகளும் பல செயல்களும் என்பதாக, வெவ்வேறாகக் கொள்பவன். இவ்விதம் வெவ்வேறாகக் கொள்வதன் பயன் என்ன என்பதைக் கூறுகிறார்; (வையம் காக்கும்) - இந்த ஜகத்தைக் காப்பாற்றுதல் என்பதற்காக ஆகும். (ஊழிதோறூழியித்யாதி - இப்படியாகக் காக்கவில்லை என்றால், அவனை "ரக்ஷகன்" என்று யாரும் விச்வாஸம் கொள்ளமாட்டார்கள் அல்லவோ? (ஆழி நீர்வண்ணனை) - அவன் இவ்விதம் காப்பாற்றாமல், துன்பம் ஏற்படும்படிச் செய்தாலும் கூட, விட இயலாதபடி உள்ள வடிவழகைக் கொண்டவன். இங்குள்ளவர்கள் மற்றும் அங்குள்ளவர்கள் என்ற வேறுபாடு இன்றி அனைவருக்கும் காட்சி கொடுத்தபடி உள்ள, அவனுக்கே உரிய திருமேனியைக் கூறுகிறார்.

வ்யாக்யானம் - (அச்சுதனை) அவ்வடிவு தனக்கு ஒருநாளும் அழிவில்லையென்னுதல்; பற்றினாரை ஒருநாளும் விடானென்னுதல். (அணி குருகூர்) ஆபரணமான திருநகரி (கேழிலந்தாதி) ஒப்பில்லாத அந்தாதி. தம்மாலும் பிறராலும் மீட்கவொண்ணாதபடி பகவத்விஷயத்திலுண்டான வ்யவஸாயத்தைச் சொன்ன பத்தாகையாலே ஒப்பின்றிக்கே இருக்கிறபடி. ஒப்பில்லாத ஆயிரத்துள் திருப்பேரெயிலிலே சேர்ந்த இப்பத்தைக் கொண்டு. (ஆழியங் கையனை யேத்தவல்லார்) இதெல்லாவற்றாலும் சொல்லிற்றாயிற்று, கையுந்திருவாழியுமான வழகிலே இவர் அகப்பட்டபடி, அல்லாத அழகுகள் ஒருபடியும் இது ஒருபடியுமாயிருக்கை; இது கைமேலே யநுபவித்துக் காணலாமே. (அவரடிமைத் திறத்தாழியாரே) அடிமை வர்க்கத்தில் திருவாழியின் தன்மையை யுடையவரென்னுதல்; அடிமையிடையாட்டத்தில் ஒருவரால் மீட்கவொண்ணாதபடி உட்புகுவரென்னுதல்.

விளக்கம் – (அச்சுதனை) - அத்தகைய வடிவத்திற்கு எப்போதும் அழிவில்லை. தன்னைப் பற்றியவர்களை ஒருபோதும் விடாமல் உள்ளவன். (அணி குருகூர்) - இந்த ஜகத்திற்கு ஆபரணமாக உள்ள ஆழ்வார்திருநகரி. (கேழில் அந்தாதி) - ஒப்பற்ற அந்தாதி. தன்னாலும் மற்றவர்களாலும் கூட மீட்டு எடுக்க இயாலாதபடி உள்ள பகவத் விஷயத்தில் உண்டான உறுதியைக் கூறிய பத்து என்பதால், ஒப்பில்லாதபடி இருத்தல். ஒப்பற்ற ஆயிரத்தில் திருப்பேரெயிலைச் சேர்ந்து இந்தப்

பத்து பாசுரம் மூலம். (ஆழியங் கையனை யேத்தவல்லார்) - இந்தத் திருவாய்மொழி அனைத்தாலும் கூறப்பட்டது என்னவென்றால் , “திருக்கரமும் திருவாழியும்” என்பதாக உள்ள வடிவழகில் இவர் ஆட்பட்ட விதத்தையே ஆகும்; ஆனால் “தாமரைக்கண்ணன்”, “செங்கனிவாய்”, “செஞ்சுடர் நீள்முடி” என்று பலவும் கூறப்பட்டதே என்ற கேள்விக்கு விடை தருகிறார்; திருக்கரமும் திருச்சக்கரமும் என்பது தவிர உள்ள மற்ற அழகுகள் அனைத்தும் தராசின் ஒரு தட்டு போன்றும், இந்த அழகு மற்றொரு தட்டு போன்றும் உள்ள நிலை. இதனைக் “கைமேல் பலன்” என்பது போன்று அனுபவித்துக் காணலாம்படி உள்ளது. (அவரடிமைத் திறத்தாழியாரே) - இதற்கு இரண்டுவிதமாகப் பொருள் கூறுகிறார். அடிமைகளுடைய கூட்டத்தில், சக்கரத்தாழ்வானுடைய தன்மையைக் கொண்டவராக இருத்தல் என்பது ஒரு பொருள்; அடிமைகள் செய்யும் செயல்களிலிருந்து இவரை யாராலும் மீட்டு எடுக்க இயலாதபடி ஆவர் என்பது இரண்டாவது பொருள் ஆகும்.

திருவாய்மொழி ஏழாம் பத்து மூன்றாம் திருவாய்மொழி ஸம்பூர்ணம்

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்வாமி பெரியாழ்வார் அருளிச் செய்த

பெரியாழ்வார் திருமொழி

இதற்கு ஸ்வாமி திருவாய்மொழிப்பிள்ளை அருளிச் செய்த
ஸ்வாபதேச வ்யாக்யானம் (மூலம் மட்டும்) மற்றும்
ஸ்வாமி மணவாளமாமுனிகள் அருளிச் செய்த
வ்யாக்யானம் (மூலமும், எளிய தமிழ்நடையும்)
(பகுதி – 24)

1-2-18. மண்ணும் மலையும் * கடலும் உலகேழும் *
உண்ணுந் திறத்து * மகிழ்ந்து உண்ணும் பிள்ளைக்கு **
வண்ணம் எழில் கொள் * மகரக் குழை இவை *
திண்ணம் இருந்த ஆ காணீரே *
சே இழையீர் வந்து காணீரே

பொருள் – பூமியையும், மலைகளையும், கடல்களையும், ஏழுலகங்களையும் திருவயிற்றில் வைக்கும்போது உவந்து திருவயிற்றிலே வைத்த பாலகனது, அழகிய நிறம் கொண்ட மீன் போன்ற வடிவுடைய கண தோடுகளையும், அது வசீகரிக்கும் ஆற்றலையும் வந்து காணுங்கள், அழகிய ஆபரணங்களை உடைய பெண்களே நீங்கள் வந்து காணுங்கள்.

திருவாய்மொழிப்பிள்ளை ஸ்வாபதேச அவதாரிகை - திருப்புருவத்தினின்றும் திருமகரக்குழையிலே போகிறார்.

திருவாய்மொழிப்பிள்ளை ஸ்வாபதேசம் - (மண்ணித்யாதி ஸர்வாதாரமான பூமியும், பூதரங்களும், பூமிக்கு ரக்ஷகமாகச் சூழ்ந்த ஸமுத்ரங்களும் மேலும் கீழுமான பதினாலு லோகங்களும். (உண்ணும் திறந்து மகிழ்ந்துண்ணும் பிள்ளைக்கு) மகிழ்ச்சியாவது - ஸம்ஸாரிகளுடைய பாபகரணங்கள் ஒடுக்கப் பெற்றோமென்கை. அழகிய நிறத்தையுமுடைத்தாய் கண்டவர்களுடைய சித்தத்தை அபஹரித்தால் வாங்கவொண்ணாத திண்மையிறே. (சேயிழை) பூர்வவத்.

மாமுனிகள் வ்யாக்யான அவதாரிகை - திருப்புருவத்தினழகை யநுபவித்த வநந்தரம், திருமகரக்குழையினழகை அநுபவிக்கிறார்.

விளக்கம் – திருப்புருவத்தின் அழகினை அனுபவித்த பின்னர், மீன் போன்ற தோடுகளின் அழகினை அனுபவிக்கிறார்.

மாமுனிகள் வ்யாக்யானம் - (மண்ணுமித்யாதி) ஸர்வாதாரமான பூமியும், பூமிக்காதாரமான பர்வதங்களும், பூமிக்கு ரக்ஷகமான ஸமுத்ரங்களும், மற்றுமுண்டான ஸகல லோகங்களும் ப்ரளயங் கொள்ளாதபடி திருவயிற்றிலே வைக்கிறவளவில், "இவற்றை ரக்ஷிக்கப் பெற்றோமே'" என்னும் உகப்பாலே இதுவே தாரகமாகத் திருவயிற்றிலே வைத்த பாலகனுக்கு. (வண்ணமித்யாதி) திருமேனிக்குப் பரபாகமான திருநிறத்தையும் ஸ்வஸம்ஸ்த்தாந வைசித்ரியால் வந்த அழகையுமுடைய திருமகரக்குழைகளான இவற்றினுடைய, கண்டவர்கள் கண்ணையும் செஞ்சையும் கவரும்படியான திண்மையிருக்கிறபடியைக் காணுங்கோள்; அழகிய ஆபரணங்களாலே அலங்க்ருதைகளான நீங்கள் வந்து காணுங்கோள்.

விளக்கம் – (மண்ணும்) அனைத்திற்கும் ஆதாரமான பூமியும், பூமிக்கு ஆதாரமான மலைகளும், பூமியைக் காக்கும் கடல்களும், மேலும் கீழும் உள்ள மற்ற லோகங்களும். (உண்ணும் திறத்து மகிழ்ந்து உண்ணும் பிள்ளைக்கு) – அழியாதபடியாக தனது திருவயிற்றிலே வைக்கும்போது, "இவற்றைக் காப்பாற்றும் வாய்ப்பு கிட்டியதே" என்று மகிழ்ந்தும்; ஸம்ஸாரிகளுடைய வினைப்பயனாய் உள்ள மனம் முதலான இந்த்ரியங்களையும், அவ்வினைகும் காரணமான அழுக்கு உடம்பையும் ஒடுக்கும் வாய்ப்பு கிட்டியதே என்று மகிழ்ந்தும்; இந்த மகிழ்வினாலே, கீதை (18-8) - ஞாநீ து ஆத்மைவ மே மதம் – ஞானியே அனது ஆத்மா - என்று அவனே தன் வாயால் சொல்லும்படியாக அடியார்களையும்

அவர்களின் லோகங்களையும் தனது உயிர்த் தரிப்பதற்காகத் தன்னுடனேயே தனது திருவயிற்றில் வைத்த பாலகனது. (வண்ணம் இத்யாதி) திருமேனிக்கு மேன்மையளிக்கும் வண்ணத்தையும், தன்னுடைய திருமேனியின் ஆச்சர்யமான அழகையும் கொண்டு விளங்கும் மீன் போன்ற கணத்தோடுகளையும், கண்டவர்களது சித்தத்தை அபகரிக்கும் அதன் ஆற்றலையும் காணுங்கள், அழகிய ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட நீங்கள் வந்து காணுங்கள்.

ஸ்வாமி பெரியாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி திருவாய்மொழிப்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

...தொடரும்